**தலைப்பு 52 – விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 02 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,675,853 என காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அப்பெறுமதி ரூபா 2,686,430,140 என காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 10,576,487 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் ஊடாக சொத்துக்களின் பெறுமதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் கிரயமான ரூபா 10,576,487 ஆன பெறுமதி New CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2019 திசெம்பர் 31 இல் வரவு வைக்க முடியாமல் இருந்தது. எனினும் அப்பெறுமதி ரூபா 1,186,487 ஆன சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டில் CIGAS நிகழ்ச்சிகளின் கீழ் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த ரூபா 1,186,487 தொகை திறைசேரியின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களின் ஊடாக சொத்துக்களின் பெறுமதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (இ) | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 267 விதாதா நிலையங்களுக்காக பிரதேச செயலகங்கள் ஊடாக கொள்வனவுகள் செய்யப்பட்டதுடன் ஆண்டின் போது அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,372,847 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளுக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் இனங்கண்டு கணக்கு வைக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் ஊடாக சொத்துக்களின் பெறுமதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | அனைத்து விதாதா நிலையங்களுக்கும் உரிய உபகரணங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாகவே கொள்வனவுகள் செய்யப்படுகின்றன. உரிய ஆவணங்கள் பிரதேச செயலகங்கள் மூலம் பராமரிக்கப்படுகின்றதுடன், அந்த உபகரணங்கள் விதாதா நிலையங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. இதுவரை 2018’2019 ஆம் ஆண்டுகளுக்குரிய கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு அச்சொத்துக்கள் புதிய New CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிணைப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய | நிதிப்பிரமாணம் 880 மற்றும் பிணை கட்டளை சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுபபதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50(II) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாக வும் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 11 செலவின விடயங்களுக்கான ரூபா 320,000,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | விசேட செயற்திட்ட அமைச்சின் சொத்துக்கள் இந்த அமைச்சுக்கு கையேற்கப்படுவதுடன் ஏற்கப்பட்ட சொத்துக்கள் மிகையாக இருந்தமை, பெறுகை குழு அங்கத்தவர்கள் மாற்றப்பட்டமையால் பெறுகை செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டமை, பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் தேவைப்பாட்டிற்கு ஈடாகும் வகையில் கட்டிடமொன்று இல்லாமையாலும் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 5/2019 இன் பிரகாரம் செலவினம் மட்டுப்படுத்தப்பட்டமை நிதிஏற்பாடு சேமிப்பதற்கு காரணங்களாக இருந்தன. |

**2.2 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,995,988 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது STS Forum இற்காக ஏற்பட்ட தொகையாக இருந்ததுடன் இத்தொகையைச் செலுத்துவதற்காக தேவையான கூட்டத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் விரைவாக இந்தத் தொகையைச் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் செயலாற்றல் தொடர்பான திட்டங்களின் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்களின் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் திட்டம் (Activity plan) அமுல்படுத்தப்படும் கால அட்டவணை (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த விளைவுகள் (Output) என்பன மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம், அமுல்படுத்தப்பட வேண்டிய கால அட்டவணை, அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த பூர்த்தி மற்றும் விளைவுகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட வேண்டும். | குறித்த ஆண்டில் வருடாந்த பாதீட்டை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், செயற்படுத்தப்பட்ட காலச்சட்டம் மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டி / விளைவு சுட்டிகாட்டி உட்பட செயற்பாட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டிற்கு |

| | | |
|---|---|---|
| | | கிடைத்த நிதி ஏற்பாடுகள் அடிப்படையாக கொண்டு தெரிவு செய்யப்பட முன்னுரிமை செயற் திட்டங்களுக்கு உரிய விடயங்களுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் நாளதுவரை யாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தற்போது சேவையிலுள்ள பதவியணியினரின் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. எனினும், எதிர் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது 1/2014 சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

**3.3 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் நிறைவேற்றாமை தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தேசிய விஞ்ஞான நிலையத்தில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், காணி கொள்வனவு செயற்பாடு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய திட்டங்கள் மற்றும் கால அட்டவணை என்பன சரியாக திட்டமிடப்பட வேண்டும் மற்றும் அத்திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிராந்திய ரீதியில் சோலா பெனல் மூல உற்பத்தி செயற்திட்டத்தின் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்று 100 ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அந் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டிருக்க வில்லை. இதற்காக ரூபா 400,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 38 ஆசிரியர்கள் தொடர்பு படுத்தப்பட்டு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று மாத்திரம் 2019 நவம்பர் 04 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகள் மற்றும் கால அட்டவணை என்பன சரியாகத் திட்டமிடப்பட வேண்டும். | ஆரம்பமாக 2019 நவம்பர் 04 அந் திகதி 38 ஆசிரியர்களுக்கான கல்வி அமைச்சின் (MOE) ஒத்துழைப்புடன் ஆசிரியர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்துவதற்கு கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இது நிகழ்ச்சித்திட்டத்திற் காக விடயப்பரப்பினை மீளாய்வு செய்து வருவதுடன் அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இந் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை பரீட்சிப்பதற்கான வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 70 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்ட பணத்திகு உயர்ந்த நலனொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | விஞ்ஞான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் Talent young scientific and research fellowship- நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்காக பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன் விண்ணப்பங்கள் எதுவும் | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான திட்டங்கள் மற்றும் கால அட்டவணை சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். | TYSF/ISRF நிகழ்ச்சித்திட்டத்திற் கான பத்திரிகை அறிவித்தல் 2019 சனவரி 23 ஆந் திகதி வெளியிடப் பட்டதுடன் அதற்காக 07 விண்ணப்பங்கள் அமைச்சிற்கு கிடைத்திருந்த |

| | |
|---|---|
| கிடைக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 27,140 தொகை பயனற்ற செலவினமொன்றாக இருந்தது. அமைச்சினால் சமர்ப்பித்த பதிலின் பிரகாரம் 07 விண்ணப்பங்கள் கிடைத்தாக குறிப்பிடப்பட்டிருநத போதும் அதனை உறுதிப்படுத்து வதற்கான எத்தகைய சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | போதும் அடிப்படை தகமைகள் பூர்த்தி செய்யாமையால் சீனா அல்லது இந்தியாவுடன் விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி பரிமாற்றல் திட்டத்திற்கான விண்ணப்ப மொன்றை சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. |

## 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கோள் மண்டலத்திற்கு 2 மீள் ஒளியேற்றும் மின்குமிழ்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,950,000 தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 3,049,800 தொகைக்கு 4 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2018 ஒக்தோபர் 17 ஆந் திகதி கேள்வி மதிப்பீட்டுக் குழு கூட்டத்தின் போது 04 மின் குமிழ்களை கொள்வனவு செய்வதற்கு புரொஜெக்டரை வழங்கிய தாய்க் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும் அந் நிறுவனத்திடமிருந்து மின் குமிழ்களை கொள்வனவு செய்வதற்கு முடியாமல் போனால் சர்வதேச விலை கோரல் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென | அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு கூறுவிலை சமர்ப்பிக்க கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் இலங்கை டெலிகொம் வர்ணப் பக்கங்களில் பதிவு செய்யப்பட்ட 05 மின்குமிழ் வழங்குனர் களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி முற்பகல் 11.30 இற்கு திறக்கும் போது ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை செயற்பாட்டிற்கு இணங்க உரிய கொள்வனவு இடம் பெற்றுள்ளதாக அறிய தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப குழு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் பல உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டு 4 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பிரிவின் பிரகாரம் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் கொங்கிரீட் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதும் ரூபா 3,049,800 பெறுமதியான கொள்வனவிற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான கட்டளையொன்று மூலம் கட்டளை இடப்பட்டுள்ளதுடன் வழங்குனர் முறையாக உரிய பொருட்களை இலங்கை கோள் மண்டலத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் உத்தரவாதசான்றிதழொன்றும் வழங்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |
| (இ) | விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்குரிய இலங்கை கோள் மண்டலத்தில் 564 இருக்கைகள் திருத்தம் செய்தல், பொலிஷ் செய்வதற்காக ரூபா 4,519,324 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் இச்செயற்பாட்டிற்காக மொத்த மதிப்பீட்டொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக அண்ணளவான மதிப்பீடொன்றாக ரூபா 4,000,000 தொகை செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டு பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான விடுபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை கோள் மண்டலத்தின் 275 கதிரைகளை திருத்தம் செய்யும் போது கதிரையொன்றை திருத்தம் செய்வதற்காக ரூபா 2,660 ஆன தொகை வழங்குனருக்கு | பெறுகைக்குரிய தகவல்கள் அனைத்தும் கோவை செய்யப்பட வேண்டும். | திருத்தங்களுக்குரிய கேள்விதாரரிடமிருந்து என்ன எதிர்பாரக்கப்பட்டிந்தது என கேள்வி ஆவணத்தின் 9 ஆம் பக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மேற்கொள்ள வேண்டிய திருத்தம் தொடர்பாக தகவல்கள் கோவைப் படுத்தப்படாமையால் அத்தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (உ) | இலங்கை கோள் மண்டலத்தில் இருக்கைகள் திருத்தம் செய்தல், பொலிஷ் செய்யும் செயற்பாட்டின் போது தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையின் பெறுமதி ரூபா 500,000 தொகையை மிகைத்திருந்த போதும் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 மார்ச் 07 ஆந் திகதிய பெறுகை வழங்கல் கடிதத்தில் குறித்த கேள்விதாரருக்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட அறிவிக்கப்பட்டிருந்த போதும் தாமதம் காரணமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | மேற்குறித்த செயற்பாட்டிற்காக தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10(ஈ) பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிட மிருந்து செயலாற்றல் பிணையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 மார்ச் 07 ஆந் திகதிய பெறுகை வழங்கல் கடிதத்தில் செயலாற்றல் பிணையொன்று சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் செயலாற்றல் பிணையொன்றினை சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும் குறித்த காலப்பகுதியில் இச்செயற்பாடு உரிய பிரகாரம் நிறைவேற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (எ) | மேற்குறித்த செயற்பாட்டிற்காக தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(ஆ) பந்தியின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு தேவையாயின் வெளி மதியுரையாளர்களின் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுத் தலைவரினால் வாய்மொழி மூலமாக அமைச்சின் கேள்விக் குழுவிற்கு அறிவித்த பிரகாரம் ரெக்சீன் மற்றும் ஏனைய பிரிவுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு தெரியாமல் பெறுகை செயற்பாடு வழங்குனருக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் மாதிரியை பரீட்சிப்பதற்கு வெளி மதியுரயாளர் 2019 மார்ச் 26 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் மாதிரி பரீட்சிக்கப்பட்டு வெளி மதியுரையாளால் மேற்கொள்ளப்பட்ட மேற்கொண்ட மாற்றங்களுக்காக ரூபா 186,120 ஆன மேலதிக தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | விலை தரம் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பெரிய அறிவொன்று இல்லாதிருந்தமையால் அமைச்சின் கேள்விக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அரசின் பணத்தை மிகவும் சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபடுத்தும் பொருட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு வெளிவாரி விசேடத்துவ அறிவுடன் கூடிய உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நியமிக்கப்பட்ட விசேட நிபுணத்துவ உத்தியோகத்தரின் 2019 ஏப்ரல் 09 விரிவான அறிக்கையின் பிரகாரம் செய்ய வேண்டிய விசேட செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இந்த விசேட செயற்பாடுகளுக்காக 2019 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இக்கொடுப்பனவு விசேட உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் அமைச்சு செயலாளரினதும் அங்கீகாரத்தின் பேரில் நிறைவேற்றியுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | இலங்கை கோள் மண்டலத்தில் இருக்கைகள் திருத்தம் செய்தல், பொலிஷ் செய்வதற்காக இலங்கை டெலிகொம் தொலைபேசி வழிகாட்டல் வானவில் பக்கங்களில் குஷன் செய்யும் | பெறுகைகள் மேற்கொள்ளும் போது ஆகக் குறைந்த கிரயத்தில் கூடிய நன்மையுடைய சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்வி கோரும் போது வானவில் பக்கங்களில் குறிப்பிடப்பட்ட 16 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை |

| | | | |
|---|---|---|---|
| | 16 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தன. இதன் போது 03 நிறுவனங்கள் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்களின் உரிமையாளர் ஒருவராக இருந்தனர். | நடவடிக்கை எடுக்க வேண்டும். | கோரப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். |
| (ஐ) | இலங்கை கோள் மண்டலத்தில் இருக்கைகளை தயாரிக்கும் செயற்பாட்டிற்காக அரச தொழிற்சாலை திணைக்களத்திடம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் மேற்கொள்ளும் போது ஆகக் குறைந்த கிரயத்தில் கூடிய நன்மையுடைய சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வானவில் பக்கங்கள் மூலம் விலை கோரும் போது அரச நிறுவனங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் திகதியான 2020 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி நிதிக்கூற்றுத் திகதியான 2018 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | 49 விதாதா நிலையங்களின் பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆதலால் இறுதி அறிக்கை தரிதமாக கொண்டு வரப்பட்டு பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகளை பூர்த்தி செய்கின்றேன். |
| (ஆ) | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட 01 கணனி, 01 சலவை இயந்திரம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை உள்ளடக்கிய 18 விடயங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை முறையாக மீண்டும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பொருட்களை முறையாக கையளிக்குமாறு 2019.12.20, 2019.10.24, 2019.3.14, 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி கடிதங்களின் மூலம் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மெததும்பற மற்றும் பாததும்பர விதாதா நிலையங்களில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2016 திசெம்பர் 09 ஆந் திகதி மற்றும் 2016 நவம்பர் 15 ஆந் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கில்களின் பெறுமதி ரூபா 144,920 ஆனமையால் அத்தொகையை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது மோட்டார் சைக்கிளை மீண்டும் அமைச்சிற்கு கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மெததும்பற விதாத்தா நிலையத்தில் திரு.கே.ஏ.ஆர் தர்மகீர்த்தி பதவியைக் கைவிட்டுச் சென்ற அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு முன் முறைப்பாடொன்றைப் பெற்றமையின் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கோ அல்லது ஓய்வுபெறச் செய்வதற்கோ தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. ஒழுக்காற்று உத்தியோகத்தரால் மீண்டும் சேவையில் அமர்த்துதல் அல்லது ஓய்வு பெறச்செய்தல் நிராகரிக்கப்படுமாயின் மோட்டார் சைக்கிள் பெறுமதியை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். பாததும்பற விதாத்தா நிலையத்தின் உத்தியோகத்தர் இரண்டு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்ட போதும், இதுவரையிலும் பொறுப்பேற்றலொன்று கிடைக்கவில்லை. |

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி, வருமான முத்திரை அல்லது பொருட்கள் பொறுப்பாக இருத்தல் அவ்வாறில்லையாயின் பொருட்கள் போன்வற்றை விநியோகித்தல் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு வாய்ந்த அல்லது அதிகாரக் | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

கையளித்தலின் கீழ் அந்த செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரசாங்கத்தின் உடன்படிக்கைகளுக்குரிய உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற, காசோலைகளில் கையொப்பமிடுகின்றவர் களிடமிருந்தும் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின் பிரகாரம் வைப்புக்கள் வைக்க வேண்டியிருந்த போதிலும், அந்த விடயங்கள் தொடர்பாக அமைச்சின் உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் அமைச்சின் அமைச்சரவை இல்லாத அமைச்சரின் பயன்பாட்டிற்காக ரூபா 219,999 பெறுமதியான செல்லிடத் தொலைபேசியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இத்தொலைபேசியின் உத்தரவாதக் காலத்தினுள் விபத்துக்கு உட்பட்டிருந்தது. மீண்டும் ஒரு முறை அந்த தொலைபேசியை கொள்வனவு செய்த நிறுவனத்திடமிருந்து மேலதிகமாக ரூபா 127,447 தொகை கொடுப்பனவு செய்து புதிய தொலைபேசியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த ரூபா 127,447 தொகையை செலுத்தியதமைக்கான பட்டியலின் மூலப்பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் வேலை இல.0819W0084 இன் பிரகாரம் அந்நிறுவனத்திடமிருந்து மதிப்பீடொன்று பெற்றுக் | கொடுப்பனவிற்குரிய அனைத்து தகவல்களினதும் மூலம் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பதவிக்காலம் முடிவடைந்தவுடன் பயன்பாட்டில் இருந்த சொத்துக்களை மீண்டும் அமைச்சிற்கு கையளிக்க வேண்டும். | மேற்குறித்த திருத்தம் அபான்ஸ் பீ.எல்.சி நிறுவனத்தின் நிபந்தனையொன்றாக பணக் கொடுப்பனவின் பின்னர் மாத்திரம் சேவை நிறைவேற்றப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தமையால் இன்வொயிஸின் பிரதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. தாமதம் காரணமாக மூலப்பிரதியை கோவைப்படுத்த முடியாமல் போனதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.<br><br>இதுவரை குறித்த பொருள் இருப்பு பதிவுகளுக்கு உள்ளடக்கப்பட்டு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்டு அந்த மதிப்பீட்டிற்கு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உத்தரவாதக் காலத்தினுள் சேதமடைதல் 37 தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உத்தரவாதம் தொடர்பாக எவ்வித சான்றும் இல்லாமல் இருந்ததுடன் புதிய தொலைபேசி யொன்றை மீண்டும் கொள்வனவு செய்தமை சிக்கலான விடயமொன்றாக இருந்தது. அவ்வாறே தமது சேவைக்காலம் முடிவடைந்தவுடன் தமக்கு கீழ் இருக்கும் பொளிருப்பு பொருட்களை அமைச்சிற்கு கையளிக்க வேண்டிய போதிலும், தொலைபேசியை அவ்வாறு மீண்டும் கையளிக்கப்படாமல் இருந்ததுடன் இதனை மீளப் பெற்றுக் கொள்ள அமைச்சினால் போதியளவு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | குறித்த செல்லிட தொலைபேசியை அமைச்சிற்கு முறையாக கையளிக்குமாறு அமைச்சருக்கு எழுத்த மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதும் இது எமக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பாடல் பேணாதிருந்தமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டத்தைத் தயாரிக்கும் போது முன் ஆயத்த செயற்பாடுகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அமைச்சின் சகல நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், அவற்றை அமுல்படுத்தும் போது இலக்கிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா என மதிப்பிடுவதற்கு குறித்துரைத்த தரவு முறைமை ஒன்று காணப்படாமை உண்மையாகும். அதனை சரியான பிரகாரம் தயாரிப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதிவரையில் மொத்தமான 128 செயற் திட்டங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மிகைப் பதவிகள் காணப்படுமாயின் திறைசேரியுடன் கலந்துரையாடி அந்தப் பதவிகளை ஒழிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். |